MS – 150

**II Semester B.Com./B.B.A./B.H.M. Examination, May 2016**
**(CBCS) (2014-15 and Onwards) (F + R)**
**Tamil**
**TAMIL LANGUAGE (Part – I) (Paper – II)**

Time : 3 Hours Max. Marks : 70

I. ***விரிவான*** விடை தருக :

1) பிரம்மபுரம் மேவிய பெம்மானது சிறப்புக்களை விளக்குக. 10

***(அல்லது)***

திருமழப்பாடியில் குடி கொண்டுள்ள சிவபெருமானை, சுந்தரர் பாடிய வாற்றினை விளக்குக.

2) ஔவையார் பாடல்களில் அமைந்துள்ள அறக் கருத்துக்களை விளக்குக. 10

***(அல்லது)***

புகழேந்திப் புலவரது பாடற் சிறப்புக்களை உணர்த்துக.

II. ***இடம் சுட்டிப்*** பொருள் விளக்கம் தருக :

1) ‘வரிக்குயில் பேடையொடு ஆடி
வைகி வருவன கண்டேன்’ 4

***(அல்லது)***

‘வண்ணப் பணித்தென்னை வா என்றவான் -கருணைச்
சுண்ணப் பொன் கீற்றற்கே சென்று ஊதாய் கோத்தும்பீ’

2) ‘சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்த தொகு கல்வி மனப் பழக்கம்’. 4

***(அல்லது)***

ஊருக்கு உறந்தை நிகர் கொற்கையே அம்மானை ?
ஒக்குமோ சோணாட்டுக்கு பாண்டிய நாடு அம்மானை ?

III. **இரண்டிற்கு** ஆசிரியர் குறிப்பு தருக : (2×3=6)

1) திருநாவுக்கரசர்.

2) சுந்தரர்.

3) ஔவையார்.

4) ஒட்டக்கூத்தர்.

IV. **இரண்டினைத்** திறனாய்க : (2×14=28)

1) மாதா.

2) குட்டி மயில்.

3) இடியுடன் கூடிய மழை நாளில்.

4) வெறுங் கூட்டுக்குள்.

V. **மூன்றில்** ஒரு பங்காகச் சுருக்குக : 8

மிக உயர்வான வரி வசூலிப்பு, சொத்துவிற்பனை அமைப்பு, பணவீக்கம், சட்டங்களை கடுமையாக அமுல்படுத்த முடியாத நிலை அரசியல் கட்சிகளுக்கு அளிக்கப்படும் கொடை, கடத்தல் தொழில், அரசியல் மற்றும் அதிகார வர்க்கத்தின் ஊழல், குறைந்த அளவு சம்பளம் என்பதால் முறை தவறி பொருள்களைச் சேகரிக்கும் விருப்பம் என்பவை கறுப்புப் பணம் தோன்றக் காரணங்களாகின்றன. எந்தச் செயலையும் நேரடியாகவும், உண்மையாகவும், செய்ய நினைக்கும் போது காலதாமதம் ஏற்படுவது மிக இயல்பாகும். அக் காலதாமதத்தை ஏற்க முடியாமல் விரைவாகச் செயலை முடிக்கும் நோக்கத்தோடு கையூட்டு என்ற பெயரில் குறிப்பிட்ட தொகையைக் கொடுத்து தமக்குச் சாதகமான வழியில் செயல்படுவது இன்று மிகமிக இயல்பாகி விட்டதால் கறுப்பு பண ஆளுமை பெருகி விட்டது. இதை மூல காரணமாகச் சொல்ல இயலாவிட்டாலும் பரவலாக இச்சூழல் ஏற்பட வழிவகுத்துள்ளது.